# மொத்தத் தேசிய உற்பத்தி, வருமானம், செலவு

## பொதுவான போக்குகள்

1985 இன் உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தி 1984 இன் 5.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.0 சதவீதத்திஞல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1985 இன் சாதகமான அபிவிருத்தி உண்மை நியதிகளில் காரணி வருமானத்தின் தேறிய வெளிப்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்தமையாகும். இது உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தியில் 1984 இல் ஏற்பட்ட 5.1 சதவீத அதிகரிப்பிற்கு மாருக 5.3 சதவீத அதிகரிப்பை ஏற்படுத்தியது.

அட்டவணை 1.1

தேசிய வருமான புள்ளி விபரங்கள் 1983 - 1985

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 1983(அ) | 1984(அ) | 1985(அ) | 1984 | 1985 |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 113,878 | 140,039 | 149,415 | 23.0 | 6.7 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 99,375 | 104,395 | 109,570 | 5.1 | 5.0 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 110,664 | 136,638 | 146,005 | 23.5 | 6.9 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 96,439 | 101,399 | 106,733 | 5.1 | 5.3 |
| 5. நடுவாண்டுக் குடித்தொகை ('000) ... | 15,416 | 15,599 | 15,837 | 1.2 | 1.5 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. (ரூபாய்களில்) | | | | | |
| (i) நடைமுறை விலைகள் ... | 7,179 | 8,759 | 9,219 | 22.0 | 5.3 |
| (ii) நிலையான விலைகள் ... | 6,256 | 6,500 | 6,739 | 4.0 | 3.7 |


(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1985 இல் ரூ. 1,460,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984 இன் மதிப்பிடப்பட்ட பெறுமதியினைவிட 6.9 சதவீதம் கூடுதலானதாகும். மொத்தத் தேசிய உற்பத்தியின் உண்மையான அதிகரிப்புக்களைக் கணக்கிலெடுப்பின் உள்ளடக்க விலைச் சுருக்கியானது முந்திய ஆண்டில் ஏற்பட்ட 17.4 சதவீத அதிகரிப்பிற்கு மாருக 1.5 சதவீதத்திஞல் மட்டும் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மெதுவான அதிகரிப்பு பெரும்பாலும் முக்கிய வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்தமையினுல் ஏற்பட்டதாகும்.

பதிவாளர் நாயகத் திணைக்களத்திஞல் வழங்கப்பட்ட தரவுகளின்படி இலங்கையின் நடு ஆண்டுக் குடித்தொகை 158 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984 இன் மதிப்பீடுகளைவிட 1.5 சதவீதம் கூடுதலானதாகும். எனவே தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 9,219 ஆக (ஐ.அ. டொலர் 339) அமைந்தது. உண்மை நியதிகளில் தலைக்குரிய வருமானம் 3.7 சதவீதத்திஞல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984 இன் வளர்ச்சியினை விடச் சிறிதளவு குறைவானதாகும்.

# மொத்தத் தேசிய உற்பத்தி



පුස්තකාලය
මොරටුව විශ්ව විද්‍යාලය, ශ්‍රී ලංකාව
මොරටුව.

இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் 1985 இல் 22.5 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியின் விளைவாக உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தியானது 1985 இல் 0.4 சதவீதத்தினல் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. உண்மை மொத்த தேசிய உற்பத்தி 1983 இல் ஏற்பட்ட 8.6 சதவீத அதிகரிப்பிற்கும் 1984 இல் ஏற்பட்ட 9.9 சதவீத அதிகரிப்பிற்கும் மாருக விளங்கியதுடன் இது வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாக ஏற்பட்டதாகும்.

1985 இல் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய பங்கு வேளாண்மை, தயாரிப்பு, வர்த்தகம் என்பவற்றிலிருந்து வந்த வேளையில் போக்குவரத்து, வங்கித் தொழில் என்பனவும் குறிப்பிடத்தக்களவு பங்கை வழங்கின. வேளாண்மை அதன் முந்திய ஆண்டின் வீழ்ச்சியிலிருந்து புத்துயிர் பெற்று வளர்ச்சிக்கான முக்கிய மூலமாக விளங்கியது.

அட்டவணை 1.2

**மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1983–1985**
**நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்**

| துறை | தொ.உ.க (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 1983(அ) | 1984(அ) | 1985(அ) | 1984 | 1985 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றெழில் ... ... | 26,212 | 26,113 | 28,366 | – 0.4 | 8.6 |
| இதில்: ... ... | | | | | |
| 1.1 தேயிலை ... ... | 2,309 | 2,681 | 2,759 | 16.1 | 2.9 |
| 1.2 இறப்பர் ... ... | 865 | 878 | 851 | 1.5 | – 3.1 |
| 1.3 தெங்கு ... ... | 2,992 | 2,513 | 3,828 | –16.0 | 52.3 |
| 1.4 நெல் ... ... | 6,318 | 6,166 | 6,783 | – 2.4 | 10.0 |
| 1.5 ஏனையவை (சிறு உணவுப் பயிர்கள், காட்டுத் தொழிலும் கடற்றெழிலும் உட்பட) ... | 13,728 | 13,875 | 14,145 | 1.1 | 1.9 |
| 2. சுரங்க அகழ்தலும், கல் உடைத்தலும் ... | 2,413 | 2,449 | 2,486 | 1.5 | 1.5 |
| 3. தயாரிப்புத் தொழில் ... ... | 13,710 | 15,390 | 16,193 | 12.3 | 5.2 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... ... | 2,715 | 2,983 | 3,222 | 9.9 | 8.0 |
| 3.2 ஏனையவை ... ... | 10,995 | 12,407 | 12,971 | 12.8 | 4.5 |
| 4. கட்டடவாக்கம் ... ... | 8,039 | 8,030 | 8,070 | – 0.1 | 0.5 |
| 5. பணிகள் ... ... | 49,001 | 52,413 | 54,455 | 7.0 | 3.9 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... ... | 99,375 | 104,395 | 109,570 | 5.1 | 5.0 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | –2,936 | –2,996 | –2,837 | — | — |
| 8. மொத்தத் தேசிய உற்பத்தி ... ... | 96,439 | 101,399 | 106,733 | 5.1 | 5.3 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.


**துறைவாரியான செயலாற்றம்**

1983—1985 காலப்பகுதிக்கான துறைவாரியான வளர்ச்சி வீதம் அட்டவணை 1.3 இல் தரப்பட்டுள்ளது. 1984 இன் வளர்ச்சியில் சிறிதளவு வீழ்ச்சியினைக் கொண்டிருந்த வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றெழில்துறை என்பன 1985 இல் 8.6 சதவீதத்தினல் வளர்ச்சியடைந்தது. தேயிலை துணைத் துறையின் மெதுவான வளர்ச்சி, இறப்பர்த் துணைத்துறையின் எதிர்க்கணிய

44742

## கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி

UNIVERSITY OF MORATUWA LIBRARY

வளர்ச்சி என்பனவற்றின்போதும் இவ்வளர்ச்சி அடையப் பட்டது. வேளாண்மைத் துறையின் பொதுவான வளர்ச்சி முக்கியமாகத் தெங்குத் துணைத் துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினலும், நெல் துணைத் துறையின் மீட்சியினலும் ஏற்பட்டதாகும். தெங்குத் துணைத்துறையில் ஏற்பட்ட 52.3 சதவீதம் கொண்ட வளர்ச்சிவீதம் அண்மை ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளுக்கு இணையற்றதொன்ருக விளங்கியது. 1985 இல் நெல் துறையில் ஏற்பட்ட 10 சதவீத வளர்ச்சி 1984 இல் காணப்பட்ட சிறிதளவு வீழ்ச்சிக்கு முரணான தாகும். ஏனைய வேளாண்மைத்துறையில் ஏற்பட்டவளர்ச்சி முந்திய ஆண்டின் வளர்ச்சியினைவிடக் குறைவானதாக விளங்கியது. கடற்ரெழில் துணைத்துறை முந்திய ஆண்டினைவிடச் சிறிதளவு சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது.

தயாரிப்புத்துறையின் பொதுவான வளர்ச்சி 1984 இன் 12.3 சத வீதத்திலிருந்து 1985 இல் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது முக்கியமாகத் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வளர்ச்சி 5.0 சதவீதத்திலிருந்து 5.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக ஏற்பட்டதாகும்.

சுரங்க பார்குழித்துறை 1985 இல் 1.5 சதவீத வளர்ச்சியினைக் கொண்டிருந்தது. கட்டிட அமைப்பில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியும் இரத்தினக் கல் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இக் குறைந்தவீத வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

கட்டடத்துறையில் முந்திய ஆண்டில் ஏற்பட்ட 0.1 சதவீத வீழ்ச்சிக்கு மாருக 1985 இல் 0.5 சதவீத வளர்ச்சி காணப்பட்டது. மின்வலு, வாயு, நீர்நலத்துறைப்பணிகளின் கூட்டிய பெறுமதி முந்திய ஆண்டினதைப் போன்ற வீதத்தில் அதிகரித்தன. மின்வலு உருவாக்கம் இவ்வாண்டில் ஏறக்குறைய 9.0 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்துறை 1985 இல் 4.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்தச் சில்லறை வர்த்தகத்தின் கூட்டிய பெறுமதி முந்திய ஆண்டினை விடக் குறைவான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் ஏற்றுமதிகள் துணைத் துறையில் ஏற்பட்ட எதிர்க்கணிய வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டதாகும். இறக்குமதிகள் துணைத் துறை முந்திய ஆண்டினைவிட அதிகரித்த வீத வளர்ச்சியினைக் கொண்டிருந்தது. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் துறையின் கூட்டிய பெறுமதி 1985 இல் 9.9 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தது.

வதிவிட உடைமைகள், பொது நிருவாகம் இரண்டும் முறையே 1.5 சதவீதமும், 6.4 சதவீதமும் கொண்ட குறைந்தளவான வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்த வேளையில் சுற்றுலாக் கைத்தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சியினல் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பணிகள்துறை 4.7 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சியினைக் கொண்டிருந்தது.

## அட்டவணை 1.3

### நிலையான விலைகளில் ( 1982 ) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1983 – 1985

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி ( ரூ. ப. இ. ) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு | | மொத்த தேசிய உற பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 (அ) | 1984(அ) | 1985(அ) | 1983 | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 26,212 | 26,113 | 28,366 | 27.2 | 25.8 | 26.6 | — 99 | 2,253 | — 2.0 | 42.2 |
| 1.1 வேளாண்மை ... | 21,868 | 22,300 | 24,504 | 22.7 | 22.0 | 23.0 | 432 | 2,204 | 8.7 | 41.3 |
| 1.1.1 தேயிலை ... | 2,309 | 2,681 | 2,759 | 2.4 | 2.6 | 2.6 | 372 | 78 | 7.5 | 1.5 |
| 1.1.2 இறப்பர் ... | 865 | 878 | 851 | 0.9 | 0.9 | 0.8 | 13 | — 27 | 0.3 | — 0.5 |
| 1.1.3 தெங்கு ... | 2,992 | 2,513 | 3,828 | 3.1 | 2.5 | 3.6 | — 479 | 1,315 | — 9.7 | 24.6 |
| 1.1.4 நெல் ... | 6,318 | 6,166 | 6,783 | 6.6 | 6.1 | 6.4 | — 152 | 617 | — 3.1 | 11.6 |
| 1.1.5 ஏனையவை ... | 9,384 | 10,062 | 10,283 | 9.7 | 9.9 | 9.6 | 678 | 221 | 13.7 | 4.1 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 1,816 | 1,889 | 1,923 | 1.9 | 1.9 | 1.8 | 73 | 34 | 1.5 | 0.6 |
| 1.3 கடற்றொழில் ... | 2,528 | 1,924 | 1,939 | 2.6 | 1.9 | 1.8 | — 604 | 15 | —12.2 | 0.3 |
| 2. சுரங்க அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 2,413 | 2,449 | 2,486 | 2.5 | 2.4 | 2.3 | 36 | 37 | 0.7 | 0.7 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 13,710 | 15,390 | 16,193 | 14.2 | 15.2 | 15.1 | 1,680 | 803 | 33.9 | 15.1 |
| 3.1 ஏற்றுமதி பதனிடல் ... | 2,715 | 2,983 | 3,222 | 2.8 | 2.9 | 3.0 | 268 | 239 | 5.4 | 4.5 |
| 3.2 தொழிலகக் கைத்தொழில் ... | 8,953 | 10,296 | 10,811 | 9.3 | 10.2 | 10.1 | 1,343 | 515 | 27.1 | 9.7 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 2,042 | 2,111 | 2,160 | 2.1 | 2.1 | 2.0 | 69 | 49 | 1.4 | 0.9 |
| 4. கட்டடவாக்கம் ... | 8,039 | 8,030 | 8,070 | 8.3 | 7.9 | 7.6 | — 9 | 40 | — 0.2 | 0.7 |
| 5. மின்வலு, வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,161 | 1,239 | 1,313 | 1.2 | 1.2 | 1.2 | 78 | 74 | 1.6 | 1.4 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 11,281 | 12,437 | 12,959 | 11.7 | 12.3 | 12.1 | 1,156 | 522 | 23.3 | 9.8 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 20,738 | 22,029 | 22,925 | 21.5 | 21.7 | 21.5 | 1,291 | 896 | 26.0 | 16.8 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 4,130 | 4,526 | 4,975 | 4.3 | 4.5 | 4.7 | 396 | 449 | 8.0 | 8.4 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,315 | 3,381 | 3,432 | 3.4 | 3.3 | 3.2 | 66 | 51 | 1.3 | 1.0 |
| 10. பொது நிர்வாகமும் பாதுகாப்பும் ... | 3,786 | 4,165 | 4,432 | 3.9 | 4.1 | 4.2 | 379 | 267 | 7.7 | 5.0 |
| 11. வேறு எங்கும் குறிப்பிடப்படாத பணிகள் ... | 4,590 | 4,636 | 4,419 | 4.8 | 4.6 | 4.2 | 46 | — 217 | 0.9 | — 4.1 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 99,375 | 104,395 | 109,570 | 103.0 | 103.0 | 102.7 | 5,020 | 5,175 | 101.2 | 97.0 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | — 2,936 | — 2,996 | — 2,837 | — 3.0 | — 3.0 | — 2.7 | — 60 | 159 | — 1.2 | 3.0 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 96,439 | 101,399 | 106,733 | 100.0 | 100.0 | 100.0 | 4,960 | 5,334 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலவுப் போக்கு

மொத்த உள்நாட்டுச் செலவின் விரிவாக்க வீதம் 1985 இல் தொடர்ந்து மெதுவான போக்கைக் கொண்டிருந்தது. 1984 இன் 16.4 சதவீத வளர்ச்சி வீதத்துடனும், 1983 இன் 18.6 சதவீத வளர்ச்சி வீதத்துடனும் ஒப்பிடுகையில் 1985 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 10.0 சதவீதமாகக் காணப்பட்டது.

1985 இல் நடைமுறைச் சந்தைவிலைகளிலான மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 1,790,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்திய ஆண்டினைவிட ரூ. 163,000 இலட்சம் கூடுதலானதாகும். தனியார் நுகர்வுச் செலவு 10.7 சதவீதத்தினால் அதிகரித்து 1985 இல் ரூ. 1,232,000 இலட்சத்தினை அடைந்தது. இத்தொகையில் வெளிநாட்டுப் பொருட்கள் பணிகள்மீது செலவிடப் பட்ட தொகை ரூ. 270,000 இலட்சமாகும். இது முந்திய ஆண்டினைவிட 24.3 சதவீதம் கூடுதலானதாகும். இதேவேளை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதான செலவு ரூ. 962,000 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 7.4 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. அரசதுறையின் நுகர்வுச் செலவு முந்திய ஆண்டினைவிட 23.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

கையிருப்புக்களின் மாற்றங்களையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூல தன ஆக்கம் முந்திய ஆண்டில் ஏற்பட்ட 13.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகை யில் 4.1 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்தது. தனியார்துறையினதும், அரச கூட்டுத்தாபனங்களினதும் ஒன்று சேர்ந்த மூலதன ஆக்கம் 1984 இன் 11.8 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 7.3 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது. அரசதுறையில் முந்திய ஆண்டில் 18.9 சதவீதத்தினால் வளர்ச்சியுற்ற மொத்த மூலதன ஆக்கம் 1985 இல் 57.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 1.4

மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 35,342 | 39,558 | 41,106 |
| 2. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதிகளில்) ... | 10,900 | 11,443 | 9,488 |
| 3. கப்பல்களும் வான் கலங்களும் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா.க. பெறுமதிகளில்) | 9,298 | 10,512 | 7,877 |
| 4. இறக்குமதி உள்ளடக்கம் (1இன் சதவீதமாக 2) ... | 30.8 | 28.9 | 23.1 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,
இலங்கைச் சுங்கம்.

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் 11.9 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 3.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்கு மதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் மொத்தப் பெறுமதி 1984 இன் 5.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 17.1 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தது. கப்பல்கள், வான்கலங்கள் நீங்கலான மூலதனப் பொருட்களின்

இறக்குமதி நடைமுறை ஆண்டில் 25.1 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றது. மொத்த உள்நாட்டு நிலேயான மூலதன ஆக்கத்தில் இறக்குமதிக் கூறு 1984 இல் 28.9 சதவீதமாக விளங்கிய வேளேயில் 1985 இல் இது 23.1 சதவீதமாக அமைந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட இக் கூடிய ளவு வீழ்ச்சி 1984 இன் 5 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறுனதாகும். குறைந்த இறக்குமதி அடக்கத்தைக் கொண்ட மூலதன செலவினத்திற்கு மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் முதன்மை வேலேகள் நிறைவடைந்தமையும் குறிப்பிடத்தக்க காரணமாக இருந்தது. இது மூலதனப் பொருட்களின் இறக்குமதிகளிற் பெருமளவு குறைப்பினே ஏற்படுத்தியது.

மொத்த உள்நாட்டு நிலேயான மூலதன ஆக்கத்தில் 73.2 சதவீதம் தனியார் துறை, அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் இடம் பெற்றது. இது 1984 இல் இதன் கூறிலும் பார்க்கச் சிறிதளவு குறைவானதாகும். 1984 இனேப் போன்று மூலதன ஆக்கத்தில் பெரும் பங்கு கட்டடங்களிலும் ஏனேய கட்டுமானத்திலும் ஏற்பட்டது. இத் துணேத்துறையில் நடைமுறை விலேகளிலான மூலதன ஆக்கம் 1984 இன் 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 4.1 சதவீதத்தினுல் அதிகரித்தது. பொறிகள், பொறித்தொகுதிகள், போக்குவரத்துக் கருவிகள் ஏனேய மூலதனப் பொருட்கள் என்பவற்றின் மூலதன ஆக்கம் 1985 இல் வீழ்ச்சியடைந்தது. மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட மற்றும் ஒரே ஒரு அதிகரிப்பு காணி அபிவிருத்தி, மீள்நடுகை என்பவற்ருல் ஏற்பட்ட 32.1 சதவீத அதிகரிப்பாகும்.

**மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்**

1985 இல் இலங்கைப் பொருளாதாரத்திற்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 2,213,000 இலட்சமாகும். இதில் ரூ. 1,598,000 இலட்சம் (72.2 சதவீதம்) உள்நாட்டு மூலங்களிலிருந்தும் ரூ. 615,000 இலட்சம் (27.8 சதவீதம்) இறக்குமதிகளிலிருந்தும் கிடைத்தன.

மூலவளங்களில் 18.7 சதவீதம் மூலதன ஆக்கத்திற்கு செலவிடப்பட்ட வேளேயில் 62.3 சதவீதம் நுகர்விலும் 19.0 சதவீதம் பொருட்கள், காரணியல்லாத பணிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலும் செலவிடப்பட்டது. ஒப்பிடுகையில் இது 1984 இன் மொத்த மூலவளங்களில் 19 சதவீதத்திற்கும் நுகர்வில் 59.5 சதவீதத்திற்கும் பொருட்கள், காரணி அல்லாப்பணிகளின் ஏற்றுமதிகளில் 21.4 சதவீதத்திற்கும் வகை கூறியது,

1978 இன் நிலேயான விலேகளில் மதிப்பிடுகையில் மொத்த மூலவளங்கள் முந்திய ஆண்டின் 3.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 4.7 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளன. 1984 இல் 0.7 சதவீதத்தினுல் சிறிதளவினுல் அதிகரித்த பொருட்கள், காரணி அல்லாத பணிகள் என்பவற்றின் இறக்குமதி 1985 இல் 4.1 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1984 இல் 1.5 சதவீத அதிகரிப்பைக் காட்டிய மொத்த நுகர்வு 1985 இல் 2.2 சதவீதத்தினுல் அதிகரித்த வேளேயில் 1984 இல் 1.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த மொத்த உள்நாட்டு நிலேயான மூலதன ஆக்கம் 2.0 சதவீதத்தினுல் அதிகரித்தது. அரசதுறையின் மூலதன ஆக்கம் 1984 இன் 7.2 சதவீத அதிகரிப்பிற்கு மாருக 1985 இல் 33.8 சதவீதத்தினுல் அதிகரித்தது. தனியார்துறை, அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் ஏற்பட்ட மூலதன ஆக்கம் 1984 ஆம் ஆண்டின் 0.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது 1985 இல் மேலும் 9.7 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.5

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் 1978—1985

| விடயம் | நடைமுறை சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) 1978 | 1983(அ) | 1984(அ) | 1985(அ) | 1978 விலைகளில் 1978 தொகை ப.இ. ரூ. | 1978 % | 1983(அ) தொகை ப.இ.ரூ. | 1983(அ) % | 1984(அ) தொகை ப.இ.ரூ. | 1984(அ) % | 1985(அ) தொகை ப.இ.ரூ. | 1985(அ) % | சதவீத அதிகரிப்பு 1983 இற்கு மேலாக 1984 | சதவீத அதிகரிப்பு 1984 இற்கு மேலாக 1985 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 171,982 | 207,163 | 221,281 | 59,537 | 100 | 81,472 | 100 | 84,508 | 100 | 88,503 | 100 | 3.7 | 4.7 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 42,665 | 121,601 | 153,746 | 159,787 | 42,665 | 72 | 56,049 | 69 | 58,907 | 70 | 61,852 | 70 | 5.1 | 5.0 |
| 1.2. பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் ... | 16,872 | 50,381 | 53,417 | 61,494 | 16,872 | 28 | 25,423 | 31 | 25,601 | 30 | 26,651 | 30 | 0.7 | 4.1 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 171,982 | 207,163 | 221,281 | 59,537 | 100 | 81,472 | 100 | 84,508 | 100 | 88,503 | 100 | 3.7 | 4.7 |
| 2.1. நுகர்வு ... | 36,148 | 104,834 | 123,170 | 137,872 | 36,148 | 61 | 51,191 | 63 | 51,959 | 62 | 53,100 | 60 | 1.5 | 2.2 |
| 2.2. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 8,521 | 35,342 | 39,558 | (41,106) | 8,521 | 14 | 14,278 | 17 | 14,449 | 17 | 14,745 | 17 | 1.2 | 2.0 |
| 2.2.1. அரசு ... | (3,077) | (5,963) | (7,075) | (11,009) | (3,077) | (5) | (3,628) | (4) | (3,890) | (5) | 5,205 | (6) | 7.2 | 33.8 |
| 2.2.2. அரசகூட்டுத்தாபனங்கள் | (2,056) | (29,379) | (32,483) | (30,097) | (2,056) | (3) | (10,650) | (13) | (10,559) | (12) | (9,540) | (11) | --0.9 | -9.7 |
| 2.2.3. தனியார்துறை ... | (3,388) | | | | (3,388) | (6) | | | | | | | | |
| 2.3. இருப்புக்களில் மாற்றம் ... | 33 | – 210 | 150 | 225 | 33 | — | – 55 | — | 36 | — | 63 | — | — | — |
| 2.4. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 14,835 | 32,016 | 44,285 | 42,078 | 14,835 | 25 | 16,058 | 20 | 18,064 | 21 | 20,595 | 23 | 12.5 | 14.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் நடைமுறையாண்டில் ரூ. 306,000 இலட்சத்திலிருந்து 28.3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 1985 இல் ரூ. 219,000 இலட்சத்தை அடைந்தன. இது 1983, 1984 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டுச் சேமிப்புக்களில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களுக்கு மாறுனதாகும். சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக நோக்குகையில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1984 இன் 19.9 சதவீத விகிதாசாரத்திற்கு மாறுக 1985 இல் 13.7 சதவீதமாக விளங்கின. தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தையும், தனியார் மாற்றல்களையும் உள்ளடக்கும் மொத்த தேசிய சேமிப்புக்கள் 24.6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 1985 இன் மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூ. 258,000 இலட்சத்தினை அடைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாகத் தேசிய சேமிப்புக்கள் 1984 இன் 22.2 சதவீதத்திலிருந்து 1985 இல் 16.1 சதவீதத்தினை அடைந்தன.

அட்டவணை 1.6

**தேசிய சேமிப்புகள் 1983 — 1985**

(நடைமுறைச் சந்தை விலைகளில்)

(ப. இ. ரூபாய்களில்)

| வகை | 1983 (அ) | 1984 (அ) | 1985 (அ) |
|---|---|---|---|
| 1. மொ. தே. உ. சந்தை விலைகளில் ... | 121,601 | 153,746 | 159,787 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் ... | 16,767 | 30,576 | 21,915 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | — 3,214 | — 3,401 | — 3,410 |
| 4. தேறிய தனியார் மாற்றல்கள் ... | 6,441 | 7,031 | 7,298 |
| 5. தேசிய சேமிப்புகள் ... | 19,994 | 34,206 | 25,803 |
| 6. உள்நாட்டுச் சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 2) ... | 13.8 | 19.9 | 13.7 |
| 7. தேசிய சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 5) ... | 16.4 | 22.2 | 16.1 |

* தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.